

THE EIGHTH COLUMN

# How a 34-year-old woman travelled alone to document 119 rock-cut temples of Tamil Nadu

Thilagavathy has documented all 119 rock-cut temples of Tamil Nadu travelling alone to the remotest corners of the state. Photos: On arrangement from Thilagavathy

MT Saju

25 Oct 2024 8:57 AM (Updated:25 Oct 2024 10:28 AM)

A digital camera that her husband gifted her on her birthday, a couple of lenses, a notebook and a bottle of water... Thilagavathy's backpack is not heavy as she has to return home after visiting each rock-cut temple. A couple of years ago, she told her husband that she wanted to document all the rock-cut temples in Tamil Nadu. He supported his wife, a mother of two, but with a condition. Knowing the remoteness of the location in which many rock-cut temples in Tamil Nadu are situated, he told Thilagavathy not to stay anywhere in the night and return home as early as possible.

The journey in search of rock-cut temples that Thilagavathy started in 2022 ended in September with a unique feat: She was able to take photographs of all the 119 rock-cut temples and structures in Tamil Nadu, travelling alone across the state. If you are familiar with the geography of Tamil Nadu, you will know how difficult it is t[o reach] rock-cut temples of which most are situated in the remote pockets and hills. It was challenging but there existed a connection, according to her, that eventually led her from one rock-cut to the other. Even though there are innumerable studies on the rock-cut temples of Tamil Nadu, no one has so far photographed the entire structures the way Thilagavathy did. With a long list of 119 rock-cut structures and more than 1,700 photographs, Thilagavathy is planning to bring out a coffee-table book with the help of a leading publisher.


# STONE TRAILS

Photographer documents 119 rock-cut temples in Tamil Nadu

Padmini.Sivarajah@timesofindia.com

Winding roads, remote locations, rugged landscape, and even a frightening encounter with a group of drunks — A Thilagavathy faced several challenges in her twoyear-long journey to document Tamil Nadu's rockcut temples. The photographer is now all set to showcase her collection of 1,200 clicks, capturing 119

The Federal




In about two years, Thilagavathy was able to take photographs of all the 119 rock-cut temples and structures in Tamil Nadu, travelling alone across the state. The road, however, is not easy, writes MT Saju.

16:17
dinamani.com/weekly-
12

தினமணி



# வரலாற்று சிறப்புமிக்க பிரான்மலை..

*சிவகங்கை மாவட்டத்துக்கு உள்பட்ட சிங்கம்புணரி அருகேயுள்ள மலைக் கிராமமான பிரான்மலை, கடல்மடத்தில் இருந்து 2 ஆயிரம் அடி உயரத்தில் உள்ளது.*



சிங்கம்புணரி அருகேயுள்ள பிரான்மலை குடவரைக் கோயில்.

**ஆ.திலகவதி**

Published on: 08 பிப்ரவரி 2025, 8:17 pm

# Stone Trails: Photographer Documents 119 Rock-Cut Temples in Tamil Nadu

Padmini Sivarajah / TNN / Updated: Nov 12, 2024, 21:22 IST

Ad



ாம சரித்திரம்' என்று பல சிறப்பிடம்
பெற்ற நூல்கள் உள்ளன.

நூலகத்துக்கு நாட்டின் பல்வேறு பகுதி
ளிலிருந்தும், அயல்நாடுகளில் இருந்தும்
ாள்தோறும் வருகை தருகின்றனர்.

கையெழுத்துப் பிரதிகளைச் சேகரித்
ல், பாதுகாத்தல், அவற்றை பிரசுரித்தல்
ஆகிய மூன்று முக்கியப் பணிகளை நூல
ம் மேற்கொள்கிறது. கடந்த ஏழு ஆண்
கெளில் இத்துறைக்காக 463 கையெழுத்
ப் பிரதிகளும் 467 அச்சிடப்பட்ட நூல்
ளும் சேகரிக்கப்பட்டன. பழைமையான
ஆவணங்களைப் பாதுகாக்க, பாரம்பரிய,
வீனப் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள்
ங்கு கையாளப்படுகின்றன.

இந்தக் கையெழுத்துப் பிரதிகள் முறை
ாகவும் அறிவியல் ரீதியாக, போதுமான
ாற்று சுழற்சியுடன் திறந்த மர அடுக்குக
ில் வைக்கப்பட்டுள்ளன.

நூலகத்தில் பத்து ஆயிரத்துக்கும் மேற்
ட்ட சம்ஸ்கிருதம், மலையாளம், தமிழ்
கயெழுத்துச் சுவடிகளை டிஜிட்டல் மய
ாக்குதல் பணிகள் தொடர்ந்து செய்யப்
ட்டு வருகின்றன. ஓலைச்சுவடித் துறை
ன் கையெழுத்துப் பிரதிகளின் வெளியீடு
ாடங்கப்பட்டு, இதுவரை 450 முக்கிய
டைப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.
ஸ்கிருத இதழ், மலையாளப் பத்திரி
கைளின் வாயிலாக, பல்வேறு படைப்புக
ளயும் வெளியிடுகிறோம்.

இவைதவிர, தனியார் களஞ்சியங்கள்,
மையாளர்களுக்கு பாதுகாப்பு தொடர்
ன தொழில்நுட்ப ஆலோசனைகளை
உதவிகளையும் அளிக்கிறோம்.


இந்தத் துறையின் தொகுப்புகள், பாட
ரியான, அகரவரிசை குறியீடுகளும்
ளியிடப்பட்டுள்ளன.

கற்பித்தல், ஆராய்ச்சி, ஆய்வுப் படிப்பு
ள மலையாளம், சம்ஸ்கிருத மொழி
ல் மாணவர்களைச் சேர்க்கிறோம்.
டெழுத்து, கிரந்தம், பிராமி, பழைய
த்துகள் குறித்து பட்டப்படிப்பும் உள்
" என்றார்.

தே வளாகத்தில் இயங்கிவரும் மத்
அரசின் கலாசாரத் துறையின் சார்பில்
ங்கும் தேசிய சுவடி காப்பகத்தின் மூத்
ாப்பாளர் ஷாஜியிடம் பேசியபோது:
ாடு முழுவதும் செயல்படும் 50 மையங்
ஒன்றாக, கேரளப் பல்கலைக்
தில் செயல்படும் இந்த மையம் அமைந்
ாது. கையெழுத்துப் பிரதிகளைப்
காப்பதற்காக, எண்ணெய் தடவுதல்,
நீக்குதல், பாதுகாத்தல் பணிகளை
ாகச் செய்து வருகிறோம்.

ானோர்களின் ஓலைச்சுவடிகள்
ாத்தல், வழிகாட்டுதல், இளைய
றையினருக்குக் கொண்டு செல்லு
ணிகளை மேற்கொண்டுவருகிறோம்"
ர்.

# லட்சுமி தேவி கோயில்...!



தொட்டகடவல்லி லட்சுமி தேவி கோயில் ஹொய்சலா கோயில்களில் ஒன்றாகும். தென் இந்தியாவில் லட்சுமி தேவிக்கு அர்ப்பணிக்கப்பட்ட முதல் பெரிய கோயில் இதுவாகும்.

ஹொய்சாலா வம்சத்தால் கட்டப்பட்ட ஒரே சதுஷ்கூட (நான்கு சந்நிதிகள்) கோயில் இதுவாகும். இங்குள்ள பல கட்டடக்கலை அம்சங்கள் மற்ற ஹொய்சாள கோயில்களில் காணப்படவில்லை. கல்வெட்டுகளின்படி இந்த இடம் 'தொட்டகடவல்லி காடும் பள்ளி' என்று அழைக்கப்பட்டது.

கி.பி. 1113– இல் விஷ்ணுவர்தன ஆட்சியின்போது, பணக்கார வணிகர் குல்லஹனா ராஹுதா, அவரது மனைவி சஹஜ் தேவி ஆகியோரால், சிற்பி மல்லோஜா மானியோஜா மேற்பார்வையில் கோயில் கட்டப்பட்டது. தற்போது கோயிலை இந்திய தொல்லியல் துறை பராமரித்து வருகிறது.

ஹாசன் – பேலூர் சாலையில் இருந்து 2.5 கி.மீ. தொலைவிலும், ஹாசனிலிருந்து 20.7 கி.மீ. தொலைவிலும், பேலூரில் இருந்து 24.5 கி.மீ. தொலைவிலும் கோயில் உள்ளது.

ஹாசன் மாவட்டத்தில் உள்ள மூன்று கோயில்களை உள்ளடக்கிய ஹொய்சாலாளர்களின் புனிதக் குழுமங்கள் – யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. கர்நாடகாவின் ஹொய்சாலா கோயில்கள் இந்தியாவின் 42–ஆ வது யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக உள்ளன.

கோயில்களில் உள்ள அற்புதமான சிற்பங்கள், சோப்ஸ்டோன், குளோரிடிக் ஸ்கிஸ்ட் ஆகியவற்றால் செய்யப்பட்டவை, ஹொய்சலா வம்சத்தின் மன்னர்கள் கட்டடக் கலைகளில் மேதையாக திகழ்கின்றனர்.

–ஆ.திலகவதி

# சிலிர்ப்பூட்டும் சிற்பங்கள் சிறைபிடிக்கும் திலகவதி

மேகங்கள் தொட்டு வழிபடும் விதமாக உயர்ந்தோங்கி நிற்கிறது ஒரு கோபுரம்... சடசடத்து பறந்துவரும் புறாக்களுக்கு அடைக்கலம் தருவதாக இருக்கிறது ஒரு கோபுரம்... கதிரவனின் மந்தகாச ஒளியில் ஆன்மிக அமைதியில் உறைந்திருக்கிறது இன்னொரு கோபுரம்.., திலகவதியின் சமூக வலைதள பக்கங்களில் இப்படி கோயில்கள் தொடர்பான படங்கள் குவிந்திருக்கின்றன. இந்த ஆன்மிக அடையாளங்களுக்கு ஆரவார வரவேற்பும் கிடைத்து வருகிறது.




திலகவதி



அரக்கோணம் தான் திலகவதியின் ஊர். 2 குழந்தைகளுக்கு தாய். சிறுவயதில் இருந்தே புகைப்படக் கலையில் ஆர்வம் அதிகம். திருமணத்திற்குப் பின் தனது ஆர்வத்தை கணவர் ஆறுமுக ராஜனிடம் சொல்ல, ஆச்சரியப்பட்ட அவர், ஒரு டிஜிட்டல் கேமரா வாங்கிக் கொடுத்திருக்கிறார். அதைவைத்து கண்ணில் படும் காட்சிகளையெல்லாம் பதிவு செய்த திலகவதி, ஒரு கட்டத்தில் கோயிலில் வந்து நின்றிருக்கிறார்.

கோயில் சிற்பங்கள், கோபுரங்கள் மீது தனி கவனம் செலுத்தி அவற்றை படமெடுத்து தனது சமூகவலைதள பக்கங்களில் பதிவு செய்தார். பலத்த வரவேற்பு கிடைத்தது. சிலர், படங்களில் இருக்கும் சிற்பம், கோபுரம் போன்றவற்றின் பின்னணி குறித்து ஆர்வமாக விசாரிக்க, இப்போது அது குறித்த குறிப்புகளுடன் பதிவிடுகிறார். இதற்காக பிரத்யேகமாக பயணிக்கவும் செய்கிறார். எப்படி வந்தது இந்த ஆர்வம்? என்ற கேள்வியுடன் திலகவதியிடம் பேசினோம்.



"எல்லாரும் வார இறுதியில் பொழுதுபோக்க எங்கே போகலாம்? என்று திட்டமிடுவார்கள். ஆனால் நான் எந்தக் கோயிலுக்குச் செல்லலாம்? என்று திட்டமிடுவேன். குடும்பத்தினர் வழிபாட்டில் ஈடுபட்டிருக்க, நான் கேமரா கோணம் அமைப்பதில் மூழ்கி இருப்பேன். தமிழகத்தில் உள்ள பழமையான கோயில்கள்தான் என் விருப்பத் தேர்வு. குறிப்பாக குடைவரை கோயில்களைப் பார்த்த பின் அதிலுள்ள சிலிப்பூட்டும் சிற்ப வேலைப்பாடுகள் மீது ஆர்வம் அதிகமாகிவிட்டது. குடைவரை கோயில்கள் குறித்து தேடிப்பிடித்து படித்தபோது தமிழகத்தில் மட்டும் 110 கோயில்கள் இருப்பது தெரிய வந்தது. இவற்றில் 30 கோயில்களை படமெடுத்து தொகுத்து வைத்திருக்கிறேன்" என்று சொல்லும் திலகவதி, இதுவரை 150 கோயில்களை படங்களாக பதிவு செய்திருக்கிறார். புகைப்படங்கள் எடுப்பதற்காக மேற்கு வங்கம், சிக்கிம், சீன எல்லை வரையும் பயணித்திருக்கிறார். புகைப்படக்கலை தொடர்பான பல போட்டிகளில் பரிசுகளும் வென்றிருக்கிறார்.



"பெண்ணுக்கு ஏன் போட்டோகிராபி? என்ற கிண்டலை கடந்துதான் வந்திருக்கிறேன். நாம் விரும்பும் கனவை மெய்ப்பிக்க ஒரு காலம் வரும். அதுவரை மன தைரியத்துடன் இலக்கை நோக்கி பயணிக்க வேண்டும். இப்போது எனது போட்டோக்களை முகப்பு அட்டையாக, கவிதைக்கு ஏற்ற போட்டோவாக பயன்படுத்த, விலை கொடுத்து வாங்க பலரும் விருப்பம் தெரிவிக்கின்றனர். குறிப்புகளுடன்கூடிய போட்டோக்களை ஆவணப்படுத்தி, விரைவில் ஒரு கண்காட்சி நடத்த வேண்டும் என்பது என் ஆசை" என்கிறார் திலகவதி.


குங்குமம்
தோழி
ஜனவரி 16-31, 2024
ரூ. 25 (தமிழ்நாடு, புதுச்சேரி)
ரூ. 30 (மற்ற மாநிலங்களில்)
உள்ளம் கவர்ந்தவள்
ஆர்டர் செய்தால் வீடு தேடி வரும் போளி சப்பாத்தி உணவுகள்!
வெளிநாட்டு பாணியில் சென்னையில் வொர்க் ஸ்டேஷன்ஸ்!
குடைவரை கோயில்களை ஆவணம் செய்யும் புகைப்படக் கலைஞர்

செதுக்கின அந்தக் கலை எனக்கு ஏற்படுத்திய பிரமிப்பு அதிகம். தற்போதைய தொழில்நுட்ப சூழல்ல ஒரு கட்டடம் கட்டவே நாம இவ்வளவு சிரமப்படுறோம். ஆனா, அந்தக் காலத்தில் மனித மூளையையும், உழைப்பையும் மட்டுமே நம்பி எழுப்பப்பட்ட கற்கலை, பெரும் ஆச்சர்யம். அந்தக் கோயில்களை எல்லாம், என்னோட கேமராவில் ஆவணப்படுத்தணும்னு ஆசைப்பட்டேன். 2023-ம் வருஷம், ஜூலை மாதம் என் பயணத்தை ஆரம்பிச்சேன். தமிழ்நாட்டில் இருக்கும் 120-க்கும் அதிகமான குடைவரைக் கோயில்கள்ல, இப்போ 80 கோயில்கள் வரை ஆவணப்படுத்தியிருக்கேன். நான் எடுத்த புகைப்படங்களை என் சமூக வலைதளப் பக்கங்களில் பதிவிட, நிறைய பாராட்டுகளும், ஆயிரக்கணக்கான ஃபாலோயர்ஸூம் கிடைச்சாங்க. ஆரம்பத்துல, இதுக்காக நான் தமிழகம் முழுக்கப் பயணம் செய்றதை வீட்டுல விரும்பலை. ஆனா, அதன் மூலமா எனக்குக் கிடைச்ச அடையாளம், அங்கீகாரம் எல்லாம் பார்த்துட்டு இப்போ என்னை ஊக்கப்படுத்துறாங்க'' என்பவர், தான் சென்ற கோயில்களின் சிறப்புகள் பற்றிப் பகிர்ந்தார்.



• திலகவதி

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இன்னிக்கு 1500 வருஷங்களுக்கு முன்ன மன்னர்கள் காலத்துல குடைவரைக் கோயில் கட்டடக் கலை ஆரம்பிச்சிருக்கு. பாண்டியர்கள், பல்லவர்கள்னு பலரும் பங்களிச்சிருக்காங்க. ஒரு பாறையை யானையாக மாற்றலாம், தேராக மாற்றலாம்னு அவங்க அந்தக் காலத்தில் யோசிச்சதே வியப்புதான். மாமல்லபுரம், அவங்களோட கலைக்கு சான்றா இன்றளவும் நிற்குது. இதுவரை, 80 குடைவரைகளை பார்த்திருக்கிற எனக்கு கன்னியாகுமரி மாவட்டம், திருநந்திக்கரை குடைவரை மனதுக்கு மிகவும் நெருக்கமானது. அது அமைந்திருக்கும் இடமும், கல்வெட்டுகளும் பார்க்கப் பார்க்க அலுக்காது. அதேபோல, திருச்சி, மலைக்கோட்டையின் கீழ் இருக்கும் குடைவரையும், திருவெள்ளறையில் இருக்கும் குடைவரையும் இந்தக் கலையின் மற்றொரு பரிமாணத்தை காட்டும். எமனுக்காக எடுக்கப் பட்ட ஒரே குடைவரையான திருச்சி மாவட்டம், திருப்பைஞ்ஞீலி குடைவரையும், தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு கடற்கரையோரம் இருக்கும் கிறிஸ்துவ குடைவரையும், நாமக்கல்லில் இருக்கும் அரங்கநாதர் பெருமாள் கோயில் குடைவரையும், 'இதையெல்லாம் நீங்க ஒரு தடவையாச்சும் வாழ்க்கையில பார்த்துடுங்க'னு என்னை மத்தவங்களுக்குச் சொல்ல வைக்கும். செங்கல்பட்டு மாவட்டத்தில், திருக்கழுக்குன்றம் ஊரில் இருக்கும் குடைவரை கோயிலும், மதுரையில் இருக்கும் யோக நரசிம்மப் பெருமாள் குடைவரைக் கோயிலும் நம் நினைவில் எப்போதும் தங்கியிருக்கும்.

புதுக்கோட்டை மாவட்டத்துல நிறைய குடைவரைகள் இருக்கும். சிவகங்கை மாவட்டத்துல, மகிபாலன்பட்டி ஊர்ல மலை மேல ஒரு குடைவரை, கீழ ஒரு குடைவரைனு... வேலைப்பாடுகள் கண்களை நிறைக்கும். பொதுவா, குடைவரைகள்ல வழிபாடுகள் பெரியளவில் இருக்காது. ஆனா, பிள்ளையார்பட்டி குடைவரை மிகப் பிரசித்தி பெற்ற தலம். ஆனா, அது குடைவரைங்கிறதே தெரியாத அளவுக்கு விரிவுபடுத்தி பெரிய கோயிலா கட்டமைச்சிட்டாங்க" என்பவர், ரயில்வேயில் பணிபுரியும் கணவர், பத்தாவது படிக்கும் மகள், மூன்றாவது படிக்கும் மகன் எனத் தனக்குத் துணையாக இருக்கும் குடும்பமும், தன்னுடைய நேர மேலாண்மையும் தன்னை தொடர்ந்து இதில் இயங்கவைக்கிறது என்கிறார்.

"அடுத்து, இந்தியா முழுக்க இருக்குற குடைவரைகளை ஆவணப்படுத்தணும். அப்புறம், எகிப்து நாட்டில் இருக்கும் பிரமிடுகளை புகைப்படம் எடுக்கணும்" - தன் லென்ஸ்களுக்கான ஷெட்யூல்களை சில வருடங்களுக்குத் தயார் செய்து வைத்திருக்கிறார் திலகவதி.

ஒளிப் பயணம் நீளட்டும்!



Thilagavathy



மிகவும் கவனமாக பயிற்சியினை மேற்கொண்டேன். ஆன்லைன் மூலம் பல போட்டோகிராபி சார்ந்த போட்டியிலும் பங்கு பெற்று பரிசுகளும் பெற்றேன். அது மேலும் எனக்கு பல விஷயங்களை கற்றுக் கொடுத்தது" என்றவர் குடைவரை கோயில்களை ஆவணம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டது குறித்து விவரித்தார்.

"தமிழர்களின் வரலாற்றை பறைசாற்றுவதில் மிகவும் முக்கிய பங்கு குடைவரை கோயில்களுக்கு உள்ளது. நான் என்னுடைய புகைப்படங்கள் மூலம் அதனை ஆவணப்படுத்த வி[…]பினேன். இதனால் தமிழகத்தில் உள்ள குடைவரை கோயில்கள் குறித்த ஆய்வி[…] இறங்கினேன். தமிழகத்தில் மட்டும் […] குடைவரை கோயில்கள் உள்ளன. அதி[…] 60 கோயில்களை என்னுடைய புகைப்படம் மூலம் நான் பதிவு செய்திருக்கிறேன். இந்த கோயில்கள் அனைத்தும் […] ஆண்டுகளுக்கு முன் வடிவமைக்கப்பட்டது. அதன் கலை நயங்கள் இன்று பார்த்தாலும் மனதை ஈர்க்கும் வகையில் இருக்கும். நான் தற்போது தமிழகத்தில் உள்ள குடைவரை கோயில்களை மட்டுமே படம் பிடித்து வருகிறேன். இங்குள்ள கோயில்களை முடித்த பிறகு தான் இந்தியாவில் அமைந்திருக்கும் மற்ற கோயில்களை படம் பிடிக்கணும். மேற்குவங்கம், அசாம், பஞ்சாப், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் மிகவும் அழகான குடைவரை கோயில்கள் உள்ளன. கண்டிப்பாக அதனையும் நான் என்னுடைய கேமராவில் பதிவு செய்வேன். என்னால் முடிந்தவரை இந்த கோயில்கள் அனைத்தையும் படம் பிடித்து அதற்கான தரவுகளுடன் ஒரு கட்டுரைகளை நூலாக வெளியிட வேண்டும் என்பதுதான் என் விருப்பம். இதன் மூலம் இந்த கோயில்கள் பற்றிய விவரங்களை அதன் உயிரோட்டத்திலேயே அடுத்து வரும் தலைமுறையினருக்கு கடத்த வேண்டும்" என்றவர் குடைவரை கோயில்கள் பற்றி விவரித்தார்.

"தமிழகத்தின் முதல் கிறிஸ்துவ குடைவரை என்று சொன்னால் அது மணப்பாட்டில் உள்ள பிரான்சிஸ் சேவியார் குடைவரை. 1506ம் ஆண்டு […]யான் தெயாசு- டோனா மரியா என்ற தம்பதியினருக்கு, ஸ்பெயின் நாட்டில் பிறந்தார். இவரின் தந்தை அந்நாட்டின் அரசவையில் நிதியமைச்சராகப் பணியாற்றி வந்தார். தன் ஒன்பதாம் வயதில் தந்தையை இழந்த இவர் தாயின் புராமரிப்பில் அரண்மனையில் படித்து வந்தார். ஸ்பானிஷ் மற்றும் பாஸ்க் மொழிகளில் புலமை பெற்றிருந்தார். தன் கல்லூரிக் காலத்தில் தன்னை கடவுளுக்காக அர்ப்பணித்து, 'இயேசு சபை' என்ற இயக்கம் மூலம் இறைப்பணி செய்து வந்தார். தென் தமிழகத்தில் கன்னியாகுமரி, கோட்டயம், தூச்சல், ஆலந்தலை, தூத்துக்குடி மற்றும் மணப்பாடு பகுதிகளில் தங்கி இறைப்பணியாற்றினார். மணப்பாட்டில் அவர் தங்கியிருந்த குகை மற்றும் அதற்குள் இருக்கும் நல்ல கிணறு ஆகியன இன்றும் உள்ளன. கிணறு கடற்கரை பகுதியில் இருந்தாலும் அதில் உள்ள தண்ணீர் உப்புகரிக்காது. மக்கள் அதனை குடிநீராக பயன்படுத்தி வருகிறார்கள். பல இடங்களில் இறைப்பணி செய்தவர் சான்சியான் தீவில் உடல்நலக்குறைவால் இறைவனடி சேர்ந்தார். அங்கு அவரின் உடல் புதைக்கப்பட்டாலும், அவரின் உடலில் இருந்து ஒரு எலும்பாவது இந்தியாவில் புதைக்கப்பட வேண்டும் என்று விரும்பினார் அவரின் சீடர் அந்தோணியர். புதைக்கப்பட்ட உடலை தோண்டிய போது, அது எந்தவித மாற்றமும் இல்லாமல், உருக்குலையாமல் அப்படியே இருந்தது. அவரது உடல் 1554ல், கோவா கொண்டு வரப்பட்டு, 'பாம் இயேசு தேவாலயத்தில்' இன்றுவரை பாதுகாக்கப்படுகிறது. பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்களின் பார்வைக்காக வைக்கப்படுகிறது. இவரின் நினைவாக மணப்பாட்டில் குடைவரை அமைக்கப்பட்டுள்ளது. நான் இதுவரை 50க்கும் மேற்பட்ட குடைவரைகளை படம் பிடித்து இருக்கிறேன். அதில் எனக்கு மிகவும் மனதுக்கு நெருக்கமானது திருக்கழுக்குன்றம் குடைவரை கோயில். செங்கல்பட்டில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 1400 ஆண்டுகள் பழமைவாய்ந்தது. 'ஒரு கல் மண்டபம்' என்று அழைக்கப்படும் இந்தக் கோயிலில் சிவனுக்காக ஒரு குடைவரை உள்ளது. 7ம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர், சோழர், பாண்டியர் காலத்தின் கல்வெட்டுகள் இங்கு கிடைத்துள்ளன. இது போன்ற சிறப்புமிக்க குடைவரை கோயில்களை தேடி பயணிக்க வேண்டும். அதை என் புகைப்படம் மூலம் எதிர்கால தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டும். மேலும் நான் படம்பிடித்த அனைத்து படங்களையும் குறிப்புகளுடன் ஒரு புகைப்பட கண்காட்சி நடத்த வேண்டும்" என்றார் திலகவதி.

**"திருக்கழுக்குன்றம் குடைவரை கோயில். செங்கல்பட்டில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 1400 ஆண்டுகள் பழமைவாய்ந்தது. 'ஒரு கல் மண்டபம்' என்று அழைக்கப்படும் இந்தக் கோயிலில் சிவனுக்காக ஒரு குடைவரை உள்ளது."**

தினமணி



# தமிழகத்தின் எல்லோரா!



'தமிழகத்தின் எல்லோரா' என்று அழைக்கப்படும் கழுகுமலை வெட்டுவான் கோயில் தலைகீழாகக் கட்டப்பட்ட கோயிலாகும்.

தூத்துக்குடி மாவட்டத்துக்கு உள்பட்ட கழுகுமலை எனும் இடத்தில் இந்தக் கோயில் அமைந்துள்ளது. கோவில்பட்டியிலிருந்து 22 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கழுகுமலையில் ஊரிலிருந்து 1 கி.மீ. தொலைவில் இருக்கும் மலை மீது குடைவரை கோயில் கால பிரமாண்டமாக காட்சி அளிக்கிறது.

1,200 ஆண்டுகள் பழமையான இந்தக் குடைவரை கோயில் திராவிடக் கட்டட கோயில் வடிவமைப்பைப் பயன்படுத்தி, சுமார் கி.பி. 800-இல் பாண்டிய மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது.

கருவறையில் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டுள்ளது. ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட மிருதங்க தட்சிணாமூர்த்தி இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

கோயிலே ஒரு பகுதி நிறைவடையாமல் இருப்பதைப் பார்க்க முடிகிறது. கோயில் அரைகுறையாக நிறுத்தப்பட்டதற்கு பல யூகங்கள் கூறப்படுகின்றன. கோயில் வேலை நடந்து கொண்டிருந்த நிலையில், பாறையில் வெடிப்பு ஏற்பட்டதால் நிறுத்தப்பட்டிருக்கலாம் அல்லது போரில் மன்னன் இறந்ததால் அப்படியே விடப்பட்டிருக்கலாம் என கருத்து நிலவுகிறது.

இந்தக் கோயில் ஒரு டூம் அல்லது தாமரைப் பூ தொங்குவது போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. கரடுமுரடான கழுகு மலை மீது ஏறி சற்று எட்டிப் பார்த்தால் மிகவும் கலைநயமிக்க வெட்டுவான் கோயில் தென்படுகிறது.

ஒரே கல்லினால் ஆன கோயில் என்பதுதான் சிறப்பு. ஒரு பெரிய மலையை 'ப' வடிவில் செதுக்கி, அதில் 7.50 மீட்டருக்கு சதுரமாக வெட்டி, கோயிலை மேலிருந்து கீழாக வெட்டி அற்புதமாக உருவாக்கியுள்ளனர்.

**சமணர் படுக்கை**

மலையின் மற்றொரு பகுதியில் சமணர்கள் சித்தாந்தம் போதித்த பல்கலைக்கு அடையாளமாக பல பாறைகளின் செதுக்கப்பட்ட தீர்த்தங்கரர்களின் சிற்பங்களே சாட்சியாக அமைந்துள்ளன.இந்த சமணக் கல் படுக்கைகள் குடைவரை கட்டட அமைப்பு பாண்டிய மன்னன் பராந்தக நெடுஞ்சடையன் காலத்தில் (கி.பி. 768–800) உருவாக்கப்பட்டதாக கருதப்படுகிறது.

–ஆ.திலகவதி

# தெருவோரவாசிகளுக்கான உலக கிரிக்கெட் போட்டி

...வசிப்போரின் பிள்ளைகள் சிலரை படிக்க வைத்து, அவர்
...க்கெட் போட்டியிலும் பங்கேற்க வைத்துள்ளார் சென்
...ண்டு நிறுவனமான 'கருணாலயா' பொறுப்பாளர்

...ரங்களில் தெருவோரம் வசிப்போரின் வாரிசுகள்
... இருந்தாலும், 'கருணாலயா' உருவாக்கிய 'இந்
...19-இல் லண்டனின் புகழ் பெற்ற லார்ட்ஸ் மைதா
...டியில், சாம்பியன் பட்டத்தை வென்றது.
...ன கிரிக்கெட் போட்டிகள் நடப்பதற்கு முன்னதாக,
...ளுக்கான உலக கிரிக்கெட் போட்டிகள் நடைபெ
அவர்களுக்கான போட்டி சென்னை அமீர் மஹால் மைதா
...2–இல் தொடங்கி...




தினத்தந்தி

# முத்துச்சரம்







திலகவதியின் கேமரா கண்கள் அடித்த கிளிக்குகள்





## குடைவரை கோவில்களை

# ஆவணப்படுத்தும் பெண் புகைப்படக்கலைஞர்

**பள்ளி, கல்லூரி, திருமணம், குழந்தைகள் என பெண்களின் வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுழல ஆரம்பிக்கும் தருவாயில், தன் கனவை நோக்கி அடியெடுத்து அதில் வெற்றிகரமாக பயணித்துக் கொண்டிருக்கிறார் ஈரோட்டைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர் திலகவதி.**

அரக்கோணத்தை பூர்வீகமாகக் கொண்ட இவர் படித்தது சென்னை. சிறுவயதில் இருந்து போட்டோகிராபி மீது தனி ஆர்வம் இருந்திருக்கிறது. ஆனால் அதனை எவ்வாறு செயல்படுத்துவது என்று தெரியாமல் இருந்திருக்கிறார். ஆண்டுகள் நகர திருமணம், குழந்தைகள் என குடும்ப வாழ்க்கைக்குள் சென்று விட்டார்.

உள்ளத்தில் மட்டுமே தன் போட்டோகிராபி திறமையின் மீதான அபார நம்பிக்கை கடர் விட்டு எரிந்து கொண்டே இருந்திருக்கிறது. அதற்கு ஸ்மார்ட்போனை சரியான ஆயுதமாக பயன்படுத்தியிருக்கிறார். தன் ஸ்மார்ட்போனில் எடுக்கும் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட, அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. அது கூடுதல் ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

குடும்பத்தின் ஒத்துழைப்புடன், புகைப்படம் எடுப்பதற்காகவே நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளுக்கு பயணித்து தன் புகைப்பட வேட்கையை தீர்த்துக் கொண்டிருந்தார். இவரது புகைப்படங்கள் ஒரு கதை சொல்லும் அளவிற்கு ரசிக்கும்படியாய் அனைத்து தரப்பிலும் பாராட்டையும் பெற்றது.

அதன் பின் ஸ்மார்ட்போனில் இருந்து கேமராவிற்கு மாற, முறையாக போட்டோகிராபி வகுப்புகளுக்கு சென்று கற்றார். முதலில் கடினமானதாக இருந்தபோதிலும், தொடர் பயிற்சியும், முயற்சியும் இவரை முறையான புகைப்படக் கலைஞராக மாற்றி இருக்கிறது.

ஆன்லைன் வாயிலாக நடக்கும் புகைப்பட போட்டிகளில் பங்கேற்று பரிசுகளும் பெற்றுள்ளார். தற்போது புகைப்படத்தின் மீதான காதல் தமிழகத்தின் குடைவரை கோவில்களை படம் பிடித்து ஆவணப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இதற்காக தமிழகம் முழுவதும் பயணிக்கிறார். இதுவரை தமிழகத்தில் 92 இடங்களில் சுமார் 110 குடைவரை கோவில்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குடைவரை கோவில்களை படம் பிடித்திருக்கிறார். இன்னமும், நிறைய ஊர்களுக்கு பயணிக்க திட்டம் வைத்திருக்கிறார். குடைவரை கோவில்கள் மட்டுமின்றி கோவில் கோபுரங்கள், சிற்பங்களை விதவிதமாக புகைப்படம் எடுத்து அசத்தும் திலகவதியுடன் பேசினோம். அவை இதோ...

"நான் எம்.ஏ. படித்திருக்கிறேன். சிறுவயதில் இருந்தே கட்டிடங்கள், கோவில்கள், சிற்பங்கள் மீது எனக்கு தீராதக்காதல் உண்டு. அவற்றை எனது கனவுகளுடன் சேர்த்து புகைப்படங்களைத் தொகுத்துள்ளேன். வீடுகள், பூக்கள், பாரங்கள், சமையல், வீட்டுக்கு அருகில் இருக்கும் கோவில்கள்... என சிறிய உலகுக்குள் என் கைபேசி மூலம் சுற்றி சுற்றி புகைப்படங்களை எடுத்தேன். அவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டேன். நண்பர்களிடம் ஓரளவு ஆதரவு கிடைத்தது. அதுவே புகைப்படக் கலை மீதான காதலை இன்னும் கொஞ்சம் அதிகமாக்கியது. என் கணவர் ஆறுமுகம் என் பிறந்தநாளுக்கு டி.எஸ்.எல்.ஆர். கேமராவை பரிசளித்தார். அதன் வாயிலாக, இன்னும் சிறப்பாகவே பணி தொடர்கிறது" என்றவர், குடைவரை கோவில்களைப் படம்பிடிக்கும் ஆர்வத்தை பகிர்ந்து கொண்டார்.

"தமிழர்களின் வரலாற்றை படம்பிடித்து ஆவணப்படுத்தி, புகைப்படத் தொகுப்பு மீதான தீராதக் காதலை கொஞ்சம் தீர்த்துக் கொள்ள நான் எடுத்து வைத்த ஒரு சிறு முயற்சியே இந்த குடைவரை கோவில்கள். தமிழகத்தில் உள்ள குடைவரை கோவில்களைப் பற்றி விவரம் சேகரிக்க தொடங்கினேன். 92 இடங்களில் சுமார் 110 குடைவரை கோவில்கள் அமைந்துள்ளன. அவை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கலை வடிவம் பெற்றவையாகும். மேலும் மேற்கு வங்கம், அசாம், பஞ்சாப், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள கலைத்திறன் மிக்க இடங்கள் மிகவும் பிடித்தமானவை. பயணம் செய்ய தொடங்கினேன்; படம் பிடிக்கத் தொடங்கினேன். தடைகள் பல கடந்து பயணித்து கொண்டிருக்கிறேன். இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட குடைவரை கோவில்களை படம் பிடித்திருக்கிறேன். முடிந்தவரை அனைத்து குடைவரை கோவில்களையும் படம் பிடித்து தகுந்த தரவுகளுடன் கட்டிடக்கலையை நூலாக்கி, அடுத்தடுத்த தலைமுறைக்கு உயிர் மாறாமல் கடத்த வேண்டும் என்பதே என் தற்போதைய அதிகப்பட்ச ஆசை மற்றும் கனவு என்றும் கூட சொல்லலாம்.

இந்தப் பயணத்தில் எனக்கு கணவர், நண்பர்கள், ஆசிரியர்கள் என பலதரப்பட்டவர்கள் உடனிருக்கின்றனர்" என்றார். இவரது குடைவரை கோவில் புகைப்பட கலெக்ஷனில் பல கோவில்கள் இருந்தாலும், ஒரு கோவிலை மிகவும் ஸ்பெஷலானதாக கூறுகிறார். அதுபற்றி விவரிக்கிறார்.

"ஒரு கல் மண்டபம்' என்று அழைக்கப்படும் திருக்கழுக்குன்றம் குடைவரை கோவில் தான், எனக்கு ரொம்ப ஸ்பெஷல். செங்கல்பட்டில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ள திருக்கழுக்குன்றம் குன்றில் அமைந்துள்ளது. இது 1,400 ஆண்டுகால தொன்மை வாய்ந்ததாகும். 550-க்கும் மேலான செங்குத்தான படிகளையும் கொண்டது. கி.பி. 610-640 காலத்தில் கட்டப்பட்ட சிவனுக்குரிய 'குடைக்கூவி' எனும் குடைவரை உள்ளது. 7-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர், சோழர், பாண்டியர், ராஷ்டிரகூடர் காலத்திய கல்வெட்டுகள் இங்கே கிடைத்துள்ளன" என்பவர், இதுபோலவே இன்னும் ஸ்பெஷலான குடைவரை கோவில்களை தேடி பயணிக்க ஆவலாக இருக்கிறார். தமிழகத்தின் பழங்கால கோவில்களை புகைப்படம் மூலமாக அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல முயற்சிப்பதுதான், திலகவதியின் ஆசை.

**"ரசிக்கும் திறன் ஒவ்வொருவருக்கும் மாறுபடும். மற்றவர்களுக்கு கோவில் கோபுரமாக தெரிவது, எனக்கு கலைநயமான சிற்ப கோபுரமாக தெரிகிறது. கோபுரத்தின் மேலிருந்து கீழ் வரை அதில் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பங்களை ரசிப்பது மட்டுமின்றி, அதை நுணுக்கமாக பதிவு செய்கிறேன். தமிழகத்தின் குடைவரை கோவில்கள் மட்டுமின்றி, இந்தியாவின் பல பகுதிகளில் இருக்கும் கலைநயமான கோவில்களையும் ஆவணப்படுத்துகிறேன்"**

**-திலகவதி.**






திலகவதி

# தடைகளைத் தாண்டிய பயணம்..!







ஈரோட்டைச் சேர்ந்த தெற்கு ரயில்வே ஊழியர் ஆறுமுகம் மனைவி நிலகவதி, புகைப் படம் எடுப்பதில் ஆர்வம் மிக்கவர். எம்.ஏ. பட்டதாரியான இவருக்கு விளையாட்டாகத் தொடங்கிய புகைப்பட ஆர்வமானது தினசரி நிகழ்வாகிவிட்டது. தற்போது தமிழகத்தில் 92 இடங்களில் சுமார் 110 குடைவரை கோயில்களில் நாற்பதுக்கும் மேற்பட்ட குடைவரை கோயில்களை படம் பிடித்திருக்கிறார். அவருடன் ஓர் சந்திப்பு:

**புகைப்படம் எடுப்பதில் ஆர்வம் ஏற்பட்டது எப்படி?**

எனது சொந்த ஊர் ராணிப்பேட்டை மாவட்டத்துக்கு உட்பட்ட அரக்கோணம். சிறுவயதிலிருந்தே கட்டடங்கள், கோயில்கள், சிற்பங்கள் மீது எனக்கு தீராதக் காதல் உண்டு. அவற்றை எனது கனவுகளுடன் சேர்த்து புகைப்படங்களைத் தொகுத்துள்ளேன்.

நான் கைப்பேசியில் எடுத்த வீடுகள், பூக்கள், மரங்கள், சமையல், வீட்டுக்கு அருகிலிருக்கும் கோயில்கள்... என சிறிய உலகுக்குள் சுற்றி சுற்றி புகைப்படங்களை எடுத்தேன். அவற்றை சமூக வலைதளங்களில் பதிவிட்டேன். நண்பர்களிடம் ஓரளவு ஆதரவு கிடைத்தது. அதுவே புகைப்படக் கலை மீதான காதலை இன்னும் கொஞ்சம் அதிகமாக்கியது.

என் கணவர் ஆறுமுகம் என் பிறந்த நாளுக்கு டி.எஸ்.எல்.ஆர். காமிராவை பரிசளித்தார். அதன்வாயிலாக, இன்னும் சிறப்பாகவே பணி தொடர்கிறது.

**குடைவரைக் கோயில்களைப் படம்பிடிக்க ஆர்வம் ஏற்பட்டது ஏன்?**

தமிழர்களின் வரலாறை படம்பிடித்து ஆவணப்படுத்தி, புகைப்படத் தொகுப்பை தீராதக் காதலை கொஞ்சம் தீர்த்துக் கொள்ள நான் எடுத்து வைத்த ஒரு சிறு முயற்சியே இந்த குடைவரை கோயில்கள். தமிழகத்தில் உள்ள குடைவரை கோயில்களைப் பற்றி விவரம் சேகரிக்க தொடங்கினேன்.

92 இடங்களில் சுமார் 110 குடைவரை கோயில்கள் அமைந்துள்ளன. அவை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கலை வடிவம் பெற்றவையாகும். மேலும் மேற்கு வங்கம், அஸ்ஸாம், பஞ்சாப், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள கலைத்திறன் மிக்க இடங்கள் மிகவும் பிடித்தமானவை.

பயணம் செய்ய தொடங்கினேன்; படம்பிடிக்கத் தொடங்கினேன். தடைகள் பல கடந்து பயணித்து கொண்டிருக்கிறேன். இதுவரை நாற்பதுக்கும் மேற்பட்ட குடைவரை கோயில்களை படம் பிடித்திருக்கிறேன்.

முடிந்தவரை அனைத்து குடைவரை கோயில்களையும் படம் பிடித்து தகுந்த தரவுகளுடன் கட்டடக்கலையை நூலாக்கி, அடுத்தடுத்த தலைமுறைக்கு உயிர் மாறாமல் கடத்த வேண்டும் என்பதே என் தற்போதைய அதிகபட்ச ஆசை, மற்றும் கனவு என்றும் கூட சொல்லலாம்.

இந்தப் பயணத்தில் எனக்கு துணை நிற்கும் என் கணவர், நண்பர்கள், ஆசிரியர்கள் என பலதரப்பட்டவர்கள் உடனிருக்கின்றனர்.

சிறகுகள் பூட்டிக் கொள்வேன். பறவைகளுக்கு உலகம் கூடல்ல வானம். எனக்கும் தனியாய் ஒரு உலகமும் வானமும் இருப்பதாக எண்ணிக் கொண்டு அங்கு நானும் என் கேமராவும் அலைந்து திரிவோம்.

**நீங்கள் மிகவும் ரசித்த குடைவரைக் கோயில் எது?**

'ஒருகல் மண்டபம்' என்று அழைக்கப்படும் திருக்கழுக்குன்றம் குடைவரை கோயில்தான். செங்கல்பட்டிலிருந்து சுமார் 15 கி. மீ. தொலைவில் உள்ள திருக்கழுக்குன்றம் குன்றில் அமைந்துள்ளது. இது 1,400 ஆண்டுகால தொன்மை வாய்ந்ததாகும். 550-க்கும் மேலான செங்குத்தான படிகளையும் கொண்டது.

கி.பி. 610-640) காலத்தில் கட்டப்பட்ட சிவனுக்குரிய 'குடைக்கூளி' எனும் குடைவரை உள்ளது. இது 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர், சோழர், பாண்டியர், ராஷ்டிரகூடர் காலத்திய கல்வெட்டுகள் இங்கே கிடைத்துள்ளன. பேருந்து நிறுத்தத்தை ஒட்டியவாறு மேலெழும் நன்கு திருத்தமாய் அமைக்கப்பட்டிருக்கும் அகன்ற படிவரிசை குன்றின் மேலேறிச் செல்ல உதவுகின்றன. குடைவரைக்கு சற்று உயரே படிகளைக் கடந்து சென்றால் கீழே மரகதப் பச்சை வயல்களில் திருக்கழுக்குன்றம் ஊரின் அழகும், மையமாய் பக்தவத்சலேஸ்வரர் கோயிலும், சங்குத் தீர்த்தமும் கண்களுக்கு விருந்தாய் விரியும்.

–பா.சுஜித்குமார்


உ
சிவமயம்
தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், இஞ்சிக்கொல்லை
அருள்மிகு விசாலாக்ஷி அம்பாள் உடனுறை
அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில்
கும்பாபிஷேக திருப்பணி

ஸ்வாமி, அம்பாள், பஞ்ச கணபதி, முருகன், துர்க்கை, பைரவர், சூரியன், சந்திரன், ஆஞ்சநேயர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு 45 லட்சம் மதிப்பீட்டில் திருப்பணி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் கடந்த முறை 24.01.2011 அன்று நடைபெற்றது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஆலயத்தை புனரமைப்பது நமது கடமையாகும். தங்களை போன்று நல்ல உள்ளம் படைத்தவர்களின் பங்கு இந்த திருப்பணிக்கு அவசியம் தேவைப்படுகிறது. ஆதலால் இக்கோயிலின் திருப்பணிக்கு தங்களால் இயன்ற நிதி உதவி மற்றும் பொருள் உதவி செய்து அருள்மிகு விசாலாக்ஷி உடனாகிய விசுவநாதர் பெருமானின் அருளை பெற்று சிறப்போடு வாழ அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தாங்கள் அனுப்பும் நன்கொடைகளை கீழ்க்கண்ட வங்கி கணக்கிற்கு NEFT / RTGS மூலமாகவோ அல்லது காசோலையை "இஞ்சிக்கொல்லை அருள்மிகு விஸ்வநாதர் ஆலயம் திருப்பணி கமிட்டி" என்ற பெயரிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு:
கிராமவாசிகள் மற்றும் கும்பாபிஷேக கமிட்டி, இஞ்சிக்கொல்லை

Name : Injikollai Arulmigu Viswanathar Aalayam Thirupani Committee
Address : Injikollai Agraharam, Thirucherai (Po.), Kumbakonam Tk.
A/c. No. : 500101012597797
Bank Name : City Union Bank, Gandhi Nagar, Kumbakonam 612001.
IFS Code : CIUB0000171

For further details, Contact :
B.VENKATESWARAN, Treasurer
Grand Son of Late.Boojyashree, Srividya Upasagar, Astrologer Sri S.Kunjithapatham Iyer,
Injikollai. Cell : 98849 79987,
Mail id: bharad.venkat@gmail.com



ஷன்மதி

# குடைவரை கோயில்களை ஆவணம் செய்யும் புகைப்படக் கலைஞர்!

மூன்றாம் கண் வழியாக நாம் பார்க்கும் காட்சியினை அப்படியே தத்ரூபமாக படம் பிடிப்பதுதான் போட்டோகிராபி. இதனை பெரும்பாலான ஆண்கள்தான் செய்து வந்தனர். பெண்களுக்கும் புகைப்படத் துறைக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்ன காலம் எல்லாம் மாறி இப்போது பெண்களும் கையில் கேமரா ஏந்த ஆரம்பித்துள்ளனர். அதில பலர் வைல்ட் லைஃப், சினிமா என அவர்களுக்கு பிடித்த துறையினை தேர்வு செய்து அதில் மிளிர்ந்தும் வருகிறார்கள். அதன் வரிசையில் தனக்கு பிடித்த புகைப்படத் துறையில் ஒரு பாணியினை பின்பற்றி வருகிறார் ஈரோட்டை சேர்ந்த திலகவதி. இவர் தமிழகம் மட்டுமில்லாமல் இந்தியா முழுக்க உள்ள குடைவரை கோயில்களை படம் பிடித்து அதனை ஆவணப்படுத்தி வருகிறார்.

“சென்னை அரக்கோணம்தான் என்னுடைய பூர்வீகம். படிச்சது எல்லாம் சென்னையில்தான். சின்ன வயசில் இருந்தே எனக்கு போட்டோகிராபி மேல் தனிப்பட்ட ஆர்வம் இருந்தது. ஆனால் அதை எவ்வாறு செயல்படுத்துவது என்று அந்த சமயத்தில் தெரியவில்லை. அதனால் எம்.ஏ படிச்சேன். படிப்பு முடிந்ததும் திருமணம், குழந்தைகள், குடும்பம் என்று தான் என் வாழ்க்கை நகர்ந்து கொண்டு இருந்தது. ஆனாலும் போட்டோகிராபி மேல் இருந்த என் ஆர்வம் குறையவில்லை. கேமரா இல்லாத காரணத்தால், என்னுடைய மொபைல் போனிலேயே நான் போகும் இடங்கள் மற்றும் அங்கு காணும் பொருட்களைப் படம் பிடிக்க ஆரம்பித்தேன். கண்களுக்கு தென்படும் பூக்கள், மரங்கள், வீட்டிற்கு அருகில் இருக்கும் கோயில்கள் ஏன் சமையல் சார்ந்தும் நான் பல படங்களை செல்போனில் படம் பிடித்து, சமூக வலைத்தளங்களில் பதிவு செய்தேன். அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. மேலும் நான் எடுத்த புகைப்படங்களை என் கணவரிடம் காண்பித்த போது, அவர்தான் எனக்குள் ஒளிந்து இருந்த திறமைக்கு ஊக்கம் அளித்தார். என் பிறந்தநாளுக்கு ஒரு DSLR கேமராவை பரிசளித்தார். செல்போனில் புகைப்படம் எடுத்து வந்த எனக்கு இது பெரிய அளவில் உற்சாகத்தினை அளித்தது. என்னதான் போட்டோகிராபி மேல் ஆர்வம் இருந்தாலும், அதனை முறையாக கற்றுக்கொள்ள விரும்பி பயிற்சி எடுத்துக் கொண்டேன். குறிப்பாக கேமராவில் எப்படி புகைப்படங்கள் எடுக்க வேண்டும், அதனை பயன்படுத்தும் முறைகளை கற்றுக் கொண்டேன். ஆரம்பத்தில் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் அதை எல்லாம் பார்த்தால் என் கனவினை பூர்த்தி செய்ய முடியாது என்பதால்,

Thilagavathy



# மலையடிப்பட்டி குடைவரை!

புதுக்கோட்டை மாவட்டத்துக்கு உள்பட்ட மலையடிப்பட்டி இயற்கை எழில் நிறைந்ததொரு கிராமம். இங்குள்ள பெரிய பாறையில், சிவன், அனந்தபத்மநாப சுவாமி என இரண்டு கோயில்கள் ஒன்றாக இணைந்து இரு குடைவரைக் கோயிலாக அமைந்திருக்கின்றன.

திருச்சியிலிருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ள இந்தக் கோயில், நந்திவர்மன் எனும் பல்லவ மன்னரால் உருவாக்கப்பட்டிருக்கலாம் என தல வரலாறு கூறுகிறது.

கி.பி. 730-இல் அவர் இங்குள்ள மலையை குடைந்து வாகீஸ்வரர் என்றழைக்கப்படும் கோயில் எழுப்பினார் என்றும் விஷ்ணு கோயிலானது காலத்தால் பிந்தியது என்றும் தெரிகிறது. இங்கு நரசிம்மமூர்த்தி, திருமால், அனந்த சயனமூர்த்தி, ஆதிசேஷன் ஆகியோரின் சிற்பங்கள் மலையில் செதுக்கப்பட்டுள்ளன.


தெளிவாகச் செதுக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்கள் சுவற்றிலும் தூண்களிலும் நிறைந்திருக்கின்றன 15 அடி உயரத்தில் மூலவர் சிலை செதுக்கப்பட்டிருக்கிறது. மூலவர் சிலையைச் சுற்றிலும் தேவக் கணங்களும் தெய்வ வடிவங்களும் என்ற வகையில் ஒரு கலைப்பொக்கிஷமாக இந்தச் சுவர் காட்சியளிக்கிறது.

கோயிலில் ஆங்காங்கே கல்வெட்டுக்கள் உள்ளன. கி.பி.960-ஆம் ஆண்டில் ராஜ கேசரி சுந்தரச் சோழன் கால கல்வெட்டுகளும் உள்ளன.

இந்தக் குடைவரை கோயிலின் அருகில் இருக்கும் பிரம்மாண்ட வடிவ பாறைகளின் மேல் சமணப் படுகைகள் வரிசை வரிசையாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

7-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தப் பகுதியில் சமணம் செழித்து இருந்திருக்க வேண்டும் என்பதை இந்த சமணப் படுகைகள் உணர்த்துகின்றன. தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்பை உணர்த்தும் கலைக்கோயில்கள் பட்டியலில் ஒன்றாக இந்தக் கோயில் இடம்பெறுகிறது.

-ஆ.திலகவதி



## சூரிய ஆற்றலால் இயங்கும் தெளிப்பான் ட்ரோன்கள்...

"விவசாயத்துக்குப் பயன்படும் வகையில் சூரிய ஆற்றலால் இயங்கும் தெளிப்பான் ட்ரோன்கள் எதிர்காலத்தில் பெருமளவில் பயன்பாட்டுக்கு வரும்' என்கிறார் சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் நிலையான ஆற்றல், மேலாண்மைத் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி ஏ.மு.மதுரா.

கருவியானது சூரிய ஒளியை உள்வாங்கி, அதை மின் ஆற்றலாக மாற்றுகிறது. இதன்வாயிலாக, ட்ரோனின் மோட்டார்கள், புரபெல்லர்களை இயங்குகின்றன. இதனால் அவை பறக்கவும், தெளிப்பான்களின் செயல்பாடுகளைச் செயல்படுத்தவும் அனுமதிக்கின்றன.

## என் குரலுக்கு இன்னும் வயதாகவில்லை!

"பெண்களின் குரல் பொதுவாக, மென்மையாக, இனிமையாக இருக்கும். ஆண்மைத்தனம் கொண்ட கட்டைக் குரல் உள்ள பெண் நல்ல பெண்ணாக இருக்க மாட்டாள் என்று நினைத்தவர்கள் இருந்தனர். எனது கனீர் குரலால் இந்தச் சிக்கலில் சிக்கிக் கொண்டேன். தடைகளை உடைத்து

வில்லை. சாஸ்திரிய சங்கீதத்தில் பயிற்சி பெற எனது கட்டைகுரு குரல் தடையாக இருந்தது. அதற்கு மேற்கத்திய பாடல்கள் பொருத்தமாக இருக்கும் என்று ஆங்கிலப் பாடல்களை பாட ஆரம்பித்தேன். அதுவே எனது அடையாளமாகவும் மாறியது.

பாடல்களைப் பாட சேலை, பொருந்தாது என்றாலும், எனக்கு ஒரு அடையாளமாக பிராண்டாக சேலை, பிளவுஸ், சற்றே அகலமான பொட்டு, கை நிறைய வளையல்களில் தோன்றினேன்.

தமிழில் முதன் முதலாகப் பாட வாய்ப்பு வழங்கியவர் பிரபல இசையமைப்பா




AvalVikatan

# இப்போது கடைகளில்...

# அவள் விகடன் 21.5.2024



## காடு, மேடு, கடல், மலை... குடைவரைக் கோயில்களைத் தேடி...

"தற்போதைய தொழில் நுட்ப சூழல்ல ஒரு கட்டடம் கட்டவே நாம இவ்வளவு சிரமப்படுறோம். ஆனா, அந்தக் காலத்தில் மனித மூளையையும், உழைப்பையும் மட்டுமே நம்பி எழுப்பப்பட்ட கற்கலை, பெரும் ஆச்சர்யம். அந்தக் கோயில்களை எல்லாம், என்னோட கேமராவில் ஆவணப்படுத்தணும்னு ஆசைப்பட்டேன். 2023-ம் வருஷம், ஜூலை மாதம் என் பயணத்தை ஆரம்பிச்சேன். தமிழ்நாட்டில் இருக்கும் 120-க்கும் அதிகமான குடைவரைக் கோயில்கள்ல, இப்போ 80 கோயில்கள் வரை ஆவணப்படுத்தியிருக்கேன். ஆரம்பத்துல, இதுக்காக நான் தமிழகம் முழுக்கப் பயணம் செய்றதை வீட்டுல விரும்பலை. ஆனா, இதன் மூலமா எனக்குக் கிடைச்ச அடையாளம், அங்கீகாரம் எல்லாம் பார்த்துட்டு இப்போ என்னை ஊக்கப்படுத்துறாங்க."

போட்டோகிராபர் திலகவதி



வெ.கௌசல்யா

# காடு, மேடு, கடல், மலை… குடைவரைக் கோயில்களைத்தேடி…

## ஒரு குடும்பத் தலைவியின் கேமரா பயணம்!

“என் அண்ணன் ஒரு போட்டோகிராபர். எனக்குக் கேமரா அறிமுகமானதும், அதில் ஆர்வம் ஏற்பட்டதும் அவர்கிட்ட இருந்துதான். ஆனா, இதுதான் என்னுடைய அடையாளமாகப் போகுதுனு நான் நினைச்சதில்ல. இல்லத்தரசியா செட்டில் ஆனவ, ஏழு வருஷமா போட்டோகிராபரா இயங்கிட்டு இருக்கேன். என் புகைப்படங்களுக்குக் கிடைக்கிற பாராட்டுகள் என்னைத் தொடர்ந்து க்ளிக் பண்ண வெச்சுட்டே இருக்கு” - நினைவுகளும், கனவுகளுமாகப் பேச ஆரம்பிக்கிறார், ஈரோட்டைச் சேர்ந்த 33 வயதாகும் புகைப்படக் கலைஞர் திலகவதி. சமூக வலைதளங்களில், கலை உணர்வு நிரம்பிய தன் புகைப்படங்களால் கவனிக்க வைத்தவர், தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடைவரைக் கோயில்களையும் ஆவணப்படுத்தும் தன் முயற்சியின் இறுதிப் படியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்.

“நான் பிறந்தது சென்னை. வளர்ந்தது, படிச்சது, திருமணம் செஞ்சது எல்லாம் அரக்கோணம். கணவரின் வேலை காரணமா இப்போ ஈரோட்டில் வசிக்கிறோம். அம்மா வீட்டுல கூட்டுக் குடும்பத்துல சந்தோஷம், கலாட்டானு வளர்ந்த பொண்ணு. 20 வருஷங்களுக்கு முன்னாடி, என் போட்டோகிராபர் அண்ணன் என் கையில அவரோட கேமராவைக் கொடுத்து, அடிப்படையான சில விஷயங்களைச் சொல்லிக் கொடுத்துட்டு இருப்பார். அந்த ஆர்ட் ஃபார்ம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தாலும், அதில் படிப்பு, எதிர்காலம்னு எல்லாம் அப்போ யோசிக்கத் தெரியல. டெக்ஸ்டைஸ்ல டிப்ளோமா முடிச்சதும், வீட்டுல கல்யாணம் பண்ணி வெச்சாங்க. கணவர், குழந்தைகள்னு வாழ்க்கை போச்சு. மொபைல்ல சமையல், தோட்டம், பூக்கள், டிராவல்னு போட்டோஸ் எடுத்துட்டு இருந்தேன். ஒரு ஆர்வத்துல நான் எடுக்குற அந்தப் படங்கள் எல்லாம் அழகா, நேர்த்தியா இருக்கும்” என்பவர், தன் படிப்பை தொடர்ந்து ஆங்கில இலக்கியத்தில் முதுகலை முடித்துள்ளார்.

“ஹோம் மேக்கரா இருந்துட்டே எம்.ஏ., இங்கிலீஷ் முடிச்சதோடு, எனக்கு ரொம்பப் பிடிச்ச போட்டோகிராபியில கோர்ஸ்கள் பண்ண ஆசை வந்தது. கடந்த ஏழு வருஷமா, புகைப்படக்கலையில் பல சான்றிதழ் படிப்புகளையும், இணையதள கோர்ஸ்களையும் கத்துட்டு வர்றேன். இப்போ என்கிட்ட குவாலிட்டி கேமரா, மூணு லென்ஸ் இருக்கு” என்று உற்சாகமாகச் சொல்பவர், குடைவரை கோயில்கள் முயற்சி பற்றி பகிர்ந்தார்.

"எனக்குப் பொதுவா, வாசிப்பு, வரலாறு மற்றும் கட்டடக்கலையின் மேல அதிக ஆர்வம். சமூக வலைதளத்தில், நிறைய வரலாற்று ஆய்வாளர்களோட ஆய்வுக் கட்டுரைகளைப் படிச்சப்போ, குடைவரைக் கோயில்கள் மீது ஆர்வம் ஏற்பட்டது. மலை, பெரிய பாறைனு குடைந்து, அதைக் கோயிலா

/avalvikatan



www.vikatan.com



Thilagavathy

# கனவுகளுக்கு சிறகுகள் தந்த திலகவதி

அடுப்படியில் முடங்கி விடாதே பெண்ணே... அளப்பரிய திறமைகள் உன் முன்னே... சாதம் சமைக்கத் தான் பெண் என்பது மடமை.. சாதிக்க முயன்றிடு பெண்ணே... என்ற கூற்றிற்கு ஏற்ப பள்ளி, கல்லூரிகள், திருமணம், குழந்தைகள் எனவாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நுழைய ஆரம்பிக்கும் தருவாயில், தன் கனவை நோக்கி அடியெடுத்து அதில் வெற்றிகரமாக பயணித்துக் கொண்டிருக்கிறார் ஈரோட்டைச் சேர்ந்த புகைப் படக் கலைஞர் திலகவதி.



சில பணிகள் ஆண்களுக்குத் தான் ஏற்றவை என்று சமூகம் அழுத்தமாகக் கருதிக்கொண் டிருந்தபோது, அப்படியொரு வேலையான புகைப்படக் கலையில் அசத்துகிறார் இவர். அரக்கோணத்தை பூர்வீகமாக் கொண்ட இவர் படித்தது சென்னை. சிறுவயதில் இருந்து போட்டோகிராபி மீது தனி ஆர்வம் இருந்திருக்கிறது. ஆனால் அதனை எவ்வாறு செயல்படுத்துவது என்று தெரியாமல் இருந்திருகிறார். ஆண்டுகள் நகர திருமணம், குழந்தைகள் என குடும்ப வாழ்க்கைக்குள் சென்று விட்டார்.



Thilagavathy Kutty

உள்ளத்தில் மட்டுமே தன் திறமையின் மீதான அபார நம்பிக்கை சுடர் விட்டு எரிந்து கொண்டே இருந் திருக்கிறது. அதற்கு அலை பேசியை சரியான ஆயுதமாக பயன்படுத்தியிருக்கிறார். தன் அலைபேசியில் எடுக்கும் புகைப்படங்களை சமூகவலை தளங்களில் பதிவிட அதற்கு நல்ல வரவேற்பு கிடைத் திருக்கிறது. அது கூடுதல் ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

குடும்பத்தின் ஒத்துழைப் புடன், புகைப்படம் எடுப்பதற் காகவே நாடு முழுவதிலும் பல் வேறு பகுதிகளுக்கு பயணித்து தன் புகைப்பட வேட்கையை தீர்த்துக் கொண்டிருந்தார். இவரது புகைப்படங்கள் ஒரு கதை சொல்லும் அளவிற்கு ரசிக்கும்படியாய் அனைத்து தரப்பிலும் பராட்டையும் பெற்றது.

இதன் பின் அலைபேசி யிலிருந்து கேமராவிற்கு மாற, இதற்காக முறையாக போட்டோ கிராபி வகுப்புகளுக்கு சென்று கற்றார். முதலில் கடினமானதாக இருந்தபோதுலும், சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நா பழக்கம் என்பதைப்போல் தொடர் பயிற்சி , முயற்சியும் இவரை முறையான புகைப் படக் கலைஞராக மாற்றி உள்ளது.

ஆன்லைன்வாயிலாக நடக்கும் புகைப்பட போட்டிகளில் பங்கேற்று பரிசுகளும் பெற்றுள்ளார். தற் போது புகைப்படத்தின் மீதான காதலால் தமிழகத்தின் குடை வரை கோயில்களை படம் பிடித்து ஆவணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகி றார். இதற்காக தமிழகம் முழு வதும் பயணிக்கிறார். இதோடு தமிழகத்தின் பழங்கால கோயில் களை புகைப்படம் மூலமாக அடுத்த தலைமுறைக்கு






கொண்டு செல்ல முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

திலகவதி கூறுகையில், ''கனவு மட்டுமே கண்டு கொண்டிருந்தால் ஒரு நாள் காலாவதியாகிப்போகும். முயற்சி மட்டுமே கனவுகளுக்கு சிறகுகள் கொடுக்கும். முயன்று முதல் அடி எடு என்பதற்கேற்ப கனவை நோக்கி வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கிறேன். இதற்கு கணவர் ஆறுமுகராஜன் ஒத்துழைப்பும், ஆதரவும் தான் காரணம் ,'' என்றார்.

''உன் உள்மனதிற்கு ஏதுவாக நீ உன்னுள் உயிர் கொடுக்கிறாயோ அதுவாகவே அது செயல்படும். உன்னிடம் இருந்தேமுதலில் வெற்றியை அடைய நம்பிக்கை என்னும் விதையை மனதில் தூவி பிள்ளையார் சுழி போடு" என்ற வார்த்தைகளுக்கு உயிர்ப்பூட்டும் வகையில் தன்னம்பிக்கையால் நகர்ந்து கொண்டிருக்கும் இந்த பெண் புகைப்படக் கலைஞர் திலகவதியும் பாராட்டிற் குரியவரே.

சம்பு



விழுப்புரம் மாவட்டம் மண்டகப்பட்டு குடைவரை


# 10ம் நூற்றாண்டு கோயில்களை ஆவணப்படுத்தும் பெண் புகைப்பட கலைஞர்!



பேராச்சி கண்ணன்

புகைப்படக்கலையில் பெரும்பாலும் இயற்கை, வனவிலங்குகள், பறவைகள், காடுகள் என்றே பலரும் பயணிப்பார்கள். வெகுசிலரே அரிதாக சிற்பங்கள், கோயில்கள், பழமை வாய்ந்த கட்டடக் கலைகள், மானுடம் சார்ந்த விஷயங்கள் உள்ளிட்டவற்றை புகைப்படங்களாகக் கவனப்படுத்துவார்கள்.

அப்படி அரிதானவராகவும் தனித்துவமிக்க புகைப்படக் கலைஞராகவும் மிளிர்கிறார் ஈரோட்டைச் சேர்ந்த திலகவதி. ஏனெனில் தமிழ்நாட்டின் பத்தாம் நூற்றாண்டு கோயில்களை மட்டுமே புகைப்படங்களாக ஆவணப்படுத்திக் கொண்டிருக்கும் அரிய புகைப்படக் கலைஞர் இவர்.




விழுப்புரம் மாவட்டத்திலுள்ள தளவானூர் குடைவரைக் கோயில்

ஏற்கனவே தமிழ்நாட்டிலுள்ள குடைவரைக் கோயில்கள் அனைத்தையும் தன் கேமரா வழியே ஆவணப்படுத்தி, தமிழக தொல்லியல் துறையின் அளப்பரிய பாராட்டைப் பெற்றவர். இப்போது பத்தாம் நூற்றாண்டு கோயில்களைத் தேடித் தேடித் தமிழகத்தின் குறுக்கும் நெடுக்குமாக பயணித்துக் கொண்டிருக்கிறார்.

“ஆரம்பத்துல டிராவல் போட்டோகிராபிதான் என் விருப்பமாக இருந்தது. ஆனா, குடைவரைக் கோயில்கள் பத்தி எப்போ தெரிய வந்ததோ அப்போதே என் எண்ணம் மாறிடுச்சு. எல்லாரையும்போலில்லாமல் புதிதாக ஒரு விஷயத்தைச் செய்யலாம்னு நினைச்சேன்.

அப்படி ஆரம்பிச்ச என் பயணம் இப்ப 8, 9, 10ம் நூற்றாண்டுகள்ல கட்டப்பட்ட கோயில்களை ஆவணப்படுத்தும் நீண்ட நெடிய பயணமா மாறியிருக்கு...” என உற்சாகம் பொங்கப் பேசுகிறார் 34 வயதே நிரம்பிய திலகவதி.



கள்ளக்குறிச்சி மாவட்டம் அரகண்டநல்லூர் குடைவரைக் கோயில்

“சொந்த ஊர் அரக்கோணம். திருமணமாகி ஈரோட்டுல செட்டிலாகிட்டோம். கணவர் ஆறுமுகராஜன் ரயில்வேயில் வேலை செய்றார். ஒரு பொண்ணு, ஒரு பையன்னு ரெண்டு பசங்க இருக்காங்க.


18 வயசுலேயே வீட்டுல திருமணம் பண்ணி வச்சிட்டாங்க. என் கணவர்தான் மேற்கொண்டு என்னை எம்ஏ ஆங்கில இலக்கியம் படிக்க வச்சார். என் ஆர்வத்தைக் கேட்டு, புதுசா கேமரா வாங்கித் தந்து, என்னை இப்பவரை ஊக்கப்படுத்திட்டு வர்றதும் அவர்தான்...’’ என்கிற திலகவதிக்கு, சிறு வயதிலேயே புகைப்படக்கலையில் மிகுந்த ஆர்வம்.

“இதுக்குக் காரணம் என் அண்ணன். அவர் இப்ப இல்ல. அவர் முறையாக போட்டோகிராபியை படிச்சவர். அதைப்பத்தி நண்பர்களுடன் நிறைய பேசுவார். அதைக் கேட்டு எனக்கு ஆர்வம் வந்தது. அப்ப நான் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிச்சிட்டு இருந்தேன்.


எப்படி புகைப்படம் எடுக்கணும், அதற்கான ஆங்கிள் எப்படி வைக்கணும்னு எல்லாமே அண்ணனிடம் கத்துக்கிட்டேன். அந்நேரம் கேமரா செல்போன் வந்தது. அதில் புகைப்படங்கள் எடுக்க ஆரம்பிச்சேன். பிறகு, திருமணமாகி ஈரோடு வந்துட்டேன். இங்க கணவர் என் ஆர்வத்தைப் பார்த்துட்டு புதுசாக டிஎஸ்எல்ஆர் கேமரா வாங்கித் தந்தார். அப்புறம், நிறைய கோர்ஸ்கள் அட்டெண்ட்பண்ணி போட்டோகிராபியை முழுமையா கத்துக்கிட்டேன்.



பேச்சிப்பாறை குடைவரைக் கோயில்



சிவகங்கை மாவட்டம் அரளிப்பாறை குடைவரை



திருக்கழுக்குன்றத்தில் உள்ள குடைவரைக் கோயில்

என்னுடைய புகைப்படங்களை எல்லாம் முகநூல்ல போடுவேன். முகநூல்தான் எனக்கான மேடையாக இருந்தது. அப்ப பாறை ஓவியங்கள் நோக்கி பயணிக்கும் ஒருத்தர் முகநூலில் ஒரு போஸ்ட் போட்டிருந்தார். அதில் இந்தப் பாறை ஓவியம் குடைவரைக் கோயில் பக்கத்துல இருக்குனு போட்டிருந்தார்.

அவர் எனக்கு அறிமுகம் இல்லாத நபர். ஆனா, வரலாறு எனக்கு ரொம்பப் பிடிக்கும். அதனால் அவர் கிட்ட, குடைவரைனு சொல்லியிருக்கீங்களே, அப்படினா என்னனு கேட்டேன். அப்பதான் நான் குடைவரை என்ற வார்த்தையையே முதல் முறையாகக் கேள்விப்படுறேன்.

அவர், அன்றைய மன்னர்கள் பாறைகளைக் குடைந்து கட்டின கோயில்கள்னு விளக்கமாக எடுத்துரைத்தார். அவர் சொன்ன விஷயங்கள் என்னை ஆச்சரியப்படுத்துச்சு. உடனே அது சம்பந்தமான ஆய்வுல இறங்கினேன். நிறைய வாசிச்சேன். இந்திய தொல்லியல் துறையைத் தொடர்பு கொண்டு பேசினேன். அப்படியாக என் கவனம் குடைவரைக் கோயில்கள் மேல் திரும்புச்சு.

நம்ம தமிழ்நாட்டுல 119 குடைவரைக் கோயில்கள் இருக்குது. இதனை மொத்தமாக இதுவரை யாரும் ஆவணப்படுத்தல. தொல்லியல் துறையே 60 குடைவரைக் கோயில்கள் வரைதான் ஆவணப்படுத்தியிருக்காங்க. இதை அவங்களே சொன்னாங்க.

அதனால், நாம் மொத்தமாக

ஆவணப்படுத்துவோம்னு களத்துல இறங்கினேன். அப்படியாக ஒன்றரை ஆண்டுகள் என் சொந்த செலவுல தமிழ்நாடு முழுவதும் பயணிச்சேன்.

திருநெல்வேலி, கன்னியாகுமரி, நாகர்கோவில், புதுக்கோட்டை, திருச்சி, விழுப்புரம், திண்டிவனம், மாமல்லபுரம், திருப்பரங்குன்றம், கழுகுமலை உள்ளிட்ட பகுதிகளில் குடைவரைக் கோயில்கள் உள்ளன. குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டுமே 18 கோயில்கள் வரை இருக்குது.

முகநூல்ல இருக்கிற இது சம்பந்தமான தன்னார்வலர்கள் எனக்கு நிறைய வழிகாட்டினாங்க. அப்படியாக நான் 119 குடைவரைக் கோயில்களையும் போட்டோகிராபி பண்ணினேன். இதில் அறுபதுக்கும் மேற்பட்ட கோயில்கள் முற்றுப் பெற்றவை. மற்றது முற்றுப் பெறாதவை. அப்புறம் எல்லாமே 6, 7, 8ம் நூற்றாண்டு கோயில்கள்.



சோழமாதேவி ஸ்ரீகைலாயமுடையார் கோயில்

மலையைக் குடைந்து பண்ணியிருக்கிறதால ரொம்ப நுட்பமாக செய்திருக்காங்க. குடைவரைக் கோயில்களின் தாய்நிலம் தமிழ்நாடுதான். இங்க 6ம் நூற்றாண்டில் இருந்தே குடைவரைக் கோயில்கள் இருக்கு.

இதில் முதல் குடைவரை கோயில் விழுப்புரத்துல உள்ள மண்டகப்பட்டுனு சொல்றாங்க. அதேபோல நாகர்கோவில், திருநெல்வேலி அருகே சில கோயில்களும் முதல் கோயிலாக இருக்கலாம்னு குறிப்பிடுறாங்க.

பாண்டியர் கால, பல்லவர் கால குடைவரைக் கோயில்கள்னு இருக்கு. சென்னை, விழுப்புரம் பக்கங்கள்ல பல்லவர்கள் அதிக எண்ணிக்கையில் பண்ணியிருக்காங்க. திருநெல்வேலி, மதுரை, புதுக்கோட்டை பக்கங்கள்ல பாண்டியர்களும், முத்தரையர்களும் அதிகம் செய்திருக்காங்க.

நான் 2022ம் ஆண்டு இறுதியில் தொடங்கி 2024ம் ஆண்டு ஆரம்பம்வரை அனைத்தையும் புகைப்படங்களாக ஆவணப்படுத்தினேன்.

என்னுடைய எல்லா புகைப்படங்களையும் முகநூலில் பதிவிட்டு அந்தக் குடைவரைக் கோயில் குறித்தும் எழுதினேன். முக்கால்வாசி கோயில்கள் முடிக்கிற தருணத்தில் எனக்கு நிறைய லைம்லைட் கிடைச்சது.



திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயில்

அந்நேரம் இறையன்பு ஐஏஎஸ் சாரை பார்க்கிற வாய்ப்பும் அமைஞ்சது. அவரிடம் இந்த விஷயத்தைச் சொன்னேன். அவர் ஆச்சரியமாகி, ‘இதுவரை இப்படியொரு முன்னெடுப்பை யாரும் செய்யல. நீங்க பண்றீங்க. சிறப்பாக செய்யுங்க’னு பாராட்டினார். அப்படியே தமிழக தொல்லியல் துறை ஆணையர் உதயச்சந்திரன் ஐஏஎஸ் சாரை பாருங்கனு சொன்னார்.

அதன்படி தொல்லியல் துறையினர் ஒருநாள் அழைச்சு விவரங்களை எல்லாம் கேட்டாங்க. இதற்குள் நான் எல்லா குடைவரைக் கோயில்களையும் ஆவணப்படுத்தியிருந்தேன். பிறகு தொல்லியல் துறையிலிருந்து 119 குடைவரைக் கோயில்களையும் நான் முடிச்சிருக்கேன்னு சான்றிதழ் தந்தாங்க.

அப்போ உதயச்சந்திரன் ஐஏஎஸ் சாரையும் சந்திச்சேன்.

அவரிடம் சில கோரிக்கைகளும் வச்சேன். குடைவரைக் கோயில்கள் பத்தி மக்களுக்குத் தெரியல. எனக்கே நான்கு ஆண்டுகளுக்கு முன்னாடிதான் தெரியும். அதனால் இதனை மக்களுக்குத் தெரியப்படுத்தணும் சார்னு சொன்னேன்.

ஏன்னா பிள்ளையார்பட்டியும் குன்றக்குடியும் குடைவரைக் கோயில்கள்தான். ஆனா, பிள்ளையார்பட்டி கோயிலை யாரும் குடைவரைனு சொல்றதில்ல. அதுக்குக் காரணம் நம்முடைய பேச்சு வழக்கத்தில் குடைவரைனு வரல.



திருச்சி மாவட்டம் திருவானைக்காவல் கோயில்

அந்தக் காலத்தில் கஷ்டப்பட்டு மன்னர்கள் செய்திருக்காங்க. அது வெளியில் தெரியாமல் இருக்கக் கூடாது. அதனால், குடைவரைக் கோயிலுக்கென ஒரு நாளை உருவாக்கலாம். டீ டே, காபி டே மாதிரி குடைவரைக் கோயில் டேனு இருந்தால் ஏதாவது ஒரு பத்திரிகையிலோ, டிவியிலோ செய்தி வரும். அது மக்களிடம் பரவலாகப் போய்ச் சேரும்.

அப்புறம், புத்தகத்தில் குழந்தைகளுக்கு ஒரு சிறிய பாடமாக குடைவரை பத்தி கொண்டு வரணும். அப்ப ஆரம்பத்தில் இருந்தே குழந்தைகள் படிச்சு தெரிஞ்சுப்பாங்க. அடுத்து எந்தெந்த மாவட்டத்தில் குடைவரைக் கோயில்கள் இருக்குதோ அதனை அந்த மாவட்ட அருங்காட்சியகத்தில் புகைப்படங்களாக வைக்கலாம். இதற்கான புகைப்படங்கள் எல்லாம் நான் தர்றேன் சார்னு சொன்னேன். அவரும் அதற்கு ஓகே சொன்னார்.

இப்ப நான் எடுத்த திருச்சி மலைக்கோட்டை கீழ் குடைவரைக் கோயில் புகைப்படத்தை ஃப்ரேம் பண்ணி எழும்பூரில் உள்ள தமிழக தொல்லியல் துறை அலுவலகத்தில் வச்சிருக்காங்க. இதை எனக்கு அளித்த சான்றிதழிலும் குறிப்பிட்டிருக்காங்க...” எனப் பெருமிதமாகச் சொல்கிறவர், பத்தாம் நூற்றாண்டு கோயில்களின் புகைப்படக்கலைக்குள் சென்றார்.

“தொல்லியல் துறையினரிடம் ஒருமுறை பேசிட்டு இருக்கும்போது எதேச்சையாக, ‘இதே மன்னர்கள் 43 ஆயிரம் கோயில்கள் தமிழக நிலப்பரப்பில் கட்டியிருக்காங்க. இதில் பாதிக் கோயில்கள் அழிஞ்சிடுச்சு. நீங்க குடைவரை செய்ததுபோல் இதை யாராவது செய்து கொடுத்தால் வருங்கால சந்ததியினருக்கு ரொம்ப பயனுள்ளதாக இருக்கும்’னு சொன்னாங்க.

நம்மால் முடிந்ததை நாமே பண்ணுவோமேனு தோணுச்சு. அப்படியாக நான் பத்தாம் நூற்றாண்டு கோயில்களை ஆவணப்படுத்தும் பணிக்குள் இறங்கினேன்.

இதில் பல கோயில்கள் சிதிலமாகிடுச்சு. மீதி 20 ஆயிரம் கோயில்கள் வரை இருக்கலாம். இதற்காக கடந்த மூணு மாசமாக பயணிச்சிட்டு இருக்கேன். முதல்கட்டமாக திருச்சி மாவட்டத்துல இருந்து ஆரம்பிச்சேன்.

இதுல புழக்கத்துல இருக்கிற கோயில்களையும் புழக்கத்துல இல்லாத சிதிலமடைந்த கோயில்களையும் புகைப்படங்களாக ஆவணப்படுத்துறேன். திருச்சி மாவட்டத்தில் மட்டுமே முப்பதுக்கும் அதிகமான பத்தாம் நூற்றாண்டு கோயில்கள் இருக்குது.

முசிறியிலிருந்து நாமக்கல் போகிற வழியில் ஸ்ரீனிவாசநல்லூர்னு ஒரு கிராமம். அங்க குரங்குநாதர் கோயில்னு இருக்கு. இது 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையானதுனு சொல்றாங்க. இந்தக் கோயிலின் உள்ளே இருக்கும் தெய்வம் இதுவரை என்ன சாமினு யாரும் கண்டறியல. இங்க வழிபாடும் கிடையாது. இந்தக் கோயிலில் உள்ள சிற்பங்கள் ஒவ்வொன்றும் உணர்வுபூர்வமாக இருக்கும்.

அப்புறம் சோழமாதேவியில் ஸ்ரீ கயிலாயமுடையார் கோயில்னு இருக்கு. இது தஞ்சை பெரிய கோயிலுக்கு முன்பே ராஜ ராஜ சோழன் கட்டியது. அடுத்து உறையூர் வெக்காளியம்மன் கோயில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில், திருச்செந்துறை சந்திரசேகரர் கோயில்... இப்படி பல பத்தாம் நூற்றாண்டு கோயில்கள் திருச்சி மாவட்டத்தில் இருக்குது.

அதே போல இப்ப உள்ள கோயில்களுக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில்களுக்கும் பல்வேறு வித்தியாசங்களும் இருக்குது. அப்ப உள்ள சிற்பங்கள் ஒவ்வொன்றின் நுட்பமும் வேறு விதம். கண்கள், உடல் நளினம் எல்லாம் ரொம்ப நேர்த்தியாக பண்ணியிருக்காங்க.

அப்புறம், கோயில் கோபுரங்களில் பூதங்கள் குட்டிக் குட்டியாக செதுக்கியிருப்பாங்க. அந்தமாதிரி இருந்தால் அது 10ம் நூற்றாண்டு கோயில்கள்னு எளிதாக நாம் கண்டறியலாம்.

பொதுவாக குடைவரைக் கோயில்கள் மலைகளைக் குடைந்து செய்வதால் சிற்பங்கள் பெரிதாக இருக்கும். ஆனா, நிலப்பரப்பில் அமைக்கப்படும் கோயில்கள் கற்களை வெட்டியெடுத்து வந்து செய்வாங்க. அதனால் சிற்பங்களை சிறிதாகவும் இன்னும் அழகாகவும் செதுக்கியிருப்பாங்க.

இப்ப திருச்சி மாவட்டத்தில் உள்ள பத்தாம் நூற்றாண்டு கோயில்களை ஆவணப்படுத்திட்டேன். அடுத்து மதுரை அல்லது திருநெல்வேலிக்கு பயணிக்கலாம்னு இருக்கேன்.


திலகவதி

எப்படியாவது தமிழகத்தில் உள்ள பத்தாம் நூற்றாண்டு கோயில்கள் அனைத்தையும் ஆவணப்படுத்திடணும்னு நினைச்சிருக்கேன். அதுவே என் இலக்கும்கூட...” என நம்பிக்கை மிளிர முத்தாய்ப்பாய் சொல்கிறார் திலகவதி.

